அறந்தாங்கி நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிபவர்: திரு. பு.ர. பாலசுப்பிரமணியம். எம்.ஏ.,

ந.க.எண்:2697/2023/எப்1 **நாள்:05.01.2024**

பொருள் மனைப்பிரிவு – அறந்தாங்கி நகராட்சி – புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி வட்டம் (மு) நகராட்சி அறந்தாங்கி கிராமம், வார்டு–A பிளாக் எண் 2, நகரளவு எண்கள் T.S.No. 5/62.63,15/17 2331 சதுர மீட்டரில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்கி உத்தரவிடுதல் – தொடர்பாக.

பார்வை
1. மனுதாரர்கள் திரு.ஆர். குமரேசன், என்பவரது விண்ணப்பம் நாள்: 20.12.2023
2. உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் புதுக்கோட்டை அவர்களின் நடவடிக்கைகள் கடிதம் எண்.714/2023/PD/2023/TCP, நாள்:01.09.2023.
3. அறந்தாங்கி நகராட்சி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி நாள்:29.12.2023

(((0)))

உத்தரவு.

பார்வை 1ல் கண்டுள்ள மனுதாரர்கள் திரு.ஆர். குமரேசன் என்பவரது 20.12.2023ம் தேதிய விண்ணப்பத்தின் பேரில், அறந்தாங்கி நகராட்சி – புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி வட்டம் (மு) நகராட்சி அறந்தாங்கி கிராமம், வார்டு–A பிளாக் எண் –2, நகரளவு எண்கள் T.S.No.5/62,63,15/17- 2331 சதுர மீட்டரில் அமையும் குடியிருப்பு மனைப் பிரிவுக்கு பார்வை 2ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், புதுக்கோட்டை அவர்களின் நடவடிக்கைகள் கடிதம் எண். 714/2023/PD/2023/TCP, நாள்:01.09.2023, மேற்படி குடியிருப்பு மனைப் பிரிவிற்கு SWP/LP/DTCP(PD)No.83/2023 என எண்ணிட்டு மனைப்பிரிவு நிபந்தனைகளின் பேரில் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 3ல் கண்டுள்ளவாறு அனுமதி பெற்று மனைப்பிரிவு நிபந்தனைகளுக்கு உட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட அனுமதியின் பேரில் மனுதாரர் திரு.ஆர். குமரேசன் என்பவருக்கு மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

ஆணையர்,
அறந்தாங்கி நகராட்சி

இணைப்பு : அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்,

பெறுநர். திரு.ஆர். குமரேசன்,
எண்.72, வீரமாகாளியம்மன் கோவில் தெரு, அறந்தாங்கி

நகல்: உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், புதுக்கோட்டை தகவலுக்கு.

நகல்: நகர் சார் ஆய்வர் நில அளவை பதிவேட்டில் அறந்தாங்கி நகராட்சி ஆணையர் பெயரில் தானமாக வழங்கப்பட்ட உள்ளாட்சி உபயோக மனை இடம், மின்வாரிய உபயோக மனை இடம், மனைப்பிரிவு சாலைகள் மற்றும் மனைகளை உட்பிரிவு செய்ய தக்க நடவடிக்கைக்காக மனைப்பிரிவு வரைபடம் அனுப்பிவைக்கப்படுகிறது.

நகல்: சார் பதிவாளர் அலுவலகம், அறந்தாங்கி அவர்கள் மனைப்பிரிவு வரைபடத்தின் அளவுகளின்படி பத்திரம் பதிவு செய்ய வரைபடம் அனுப்பிவைக்கப்படுகிறது.

நகல்: நகராட்சி பொறியாளர், அறந்தாங்கி அவர்களின் மேல் நடவடிக்கைக்கு

நகல்: நகரமைப்பு ஆய்வர், உதவி பொறியாளர், வருவாய் ஆய்வாளர், அறந்தாங்கி நகராட்சி ஆகியோர்களின் தகவலுக்கு.

நகல்: காசாளர் அசல் தானபத்திர ஆவண எண். 4178/2023, நாள்:24.08.2023 யை நகராட்சி கருவூலத்தில் வைத்து பாதுகாக்க வேண்டியது.